# NSW HEALTH

## COVID-19 Key Points – Thursday 19 August 2021

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணிநேரத்தில், 681 புதிய கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் பதிவாகியுள்ளனர். இந்த எண்ணிக்கையானது மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது, அத்துடன் இந்த எண்ணிக்கையை நாம் குறைத்தே ஆகவேண்டும். தென்கிழக்கு சிட்னியில் 80 வயதுப்பிரிவைச்சேர்ந்த ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
- நேற்று, 110,000 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது. நீங்கள் இன்னும் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளவில்லை என்றால், தயவுசெய்து nsw.gov.au-இல் உடனடியாக முன்பதிவு செய்யுங்கள்.
- தெற்கு மற்றும் தென்மேற்கு சிட்னிப் பகுதிகள்தான் தொடர்ந்தும் அதிக எண்ணிக்கையிலான நோய்த்தொற்றாளர்களைக் கொண்டுள்ளன. மிகவும் கவலைக்கிடமான புறநகர்ப்பகுதிகளாக, மெர்ரிலாண்ட்ஸ் (Merrylands), கில்ட்ஃபோர்ட் (Guildford), ஓபர்ன் (Auburn), கிரான்வில் (Granville), லிட்கம்ப் (Lidcombe), கிரீனேக்கர் (Greenacre) மற்றும் பிளாக்டவுன் (Blacktown) ஆகியவை இருந்துவருகின்றன.
- மேற்கு நியூ சவுத் வேல்ஸ் மற்றும் குறிப்பாக டபோ (Dubbo) மற்றும் வில்கானியா (Wilcannia) ஆகிய பகுதிகளைப் பற்றி நாங்கள் தொடர்ந்தும் கவலைகொண்டுள்ளோம். நோய்ப்பரவலின் காரணமாக, பிராந்திய நியூ சவுத் வேல்ஸ் (regional NSW)-இல் பொதுமுடக்கமானது (lockdown) ஆகஸ்ட் 28 வரை நீட்டிக்கப்படும். உங்கள் பகுதியில் உள்ள பொதுமுடக்க விதிகளை (lockdown rules) நீங்கள் அறிந்துவைத்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- நாங்கள் 70% மற்றும் 80% தடுப்பூசி விகிதங்களை எட்டும்போது, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது குறித்து எங்களால் பரிசீலிக்க முடியும். நீங்கள் கவலைக்கிடமான உள்ளூர் அரசாங்கப் பகுதிகளில் வசிக்கிறீர்கள் மற்றும் 16-39 வயதுடையவராக இருக்கிறீர்கள் என்றால், இன்றே ஒரு முன்னுரிமைச் சந்திப்பைப் பதிவு செய்யுங்கள்: Priority COVID-19 vaccination booking for 16 to 39 year-olds | NSW Government
- மக்களை மருத்துவமனைக்கு அப்பால் நாம் வைத்திருக்க வேண்டும், அத்துடன் இறப்புகளைத் தவிர்க்க வேண்டும், மேலும் வீட்டிலேயே தங்கியிருப்பதும் தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதும் தான் இதற்கான வழிகள் ஆகும்.